2024 ஜூன் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மிகப் பரவலாக வரக்கூடிய நோய் புற்று நோய். இந்தப் புற்று நோய்க்கு சிகிச்சை பெறவேண்டுமெனில் அந்த மருத்துவமனை, நம்முடைய அரசின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில்தான் இருக்கிறது. புற்று நோய், நூறில் கிட்டத்தட்ட 38-லிருந்து 42 சதவிகிதம் பேருக்கு வரக்கூடிய சூழல் இன்றைக்கு உருவாகி இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒரு புற்று நோய் சிறப்புப் பிரிவை ஏற்படுத்த முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தக் கேள்வியை உங்கள் முன்னால் வைத்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற்று நோயைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உலகத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கிற நோய்களில் ஒன்றாகவே இருந்து கொண்டிருக்கிறது. அந்தவகையில்தான் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் வரை தமிழகத்தில் புற்று நோய் ஆராய்ச்சி கருவி, PET-CT scan கருவி இரண்டு இடங்களில் மட்டுமே இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இரண்டு இடங்களில் மட்டுமே இருந்த PET-CT scan கருவி நாகர்கோவில், தஞ்சாவூர், சேலம், கோவை, காஞ்சிபுரம் ஆகிய ஐந்து இடங்களையும் சேர்த்து இப்போது 7 இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. நான்கு, ஐந்து குறிப்பிட்ட மாவட்டங்களில் புற்று நோய்க்கான அறிகுறிகள் அதிகரித்து வருகிற நிலையில் அந்த மக்களுக்கு முழுமையாகப் பரிசோதனைகள் செய்து,

தொடக்க நிலையிலேயே புற்று நோயைக் கண்டறியும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தவகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஈரோட்டில் அந்தத் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டு, ஈரோடு, கன்னியாகுமரி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் இருக்கிற மக்களுக்கு புற்று நோய் குறித்த பரிசோதனைகள் முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை மேலும் தமிழ்நாடு முழுவதிலும் முழுமையாக விரிவுபடுத்துவதற்கான செயல், இந்த அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

கூடுதல் சிற்றுந்து வசதி

***94257—திரு. A.G. வெங்கடாசலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சியில் உள்ள 32 கிராமங்களுக்கும் கூடுதலாக சிற்றுந்துகளை இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சிக்குட்பட்ட மொத்தம் 34 கிராமங்களில், 22 கிராமங்களுக்கு போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மீதமுள்ள 12 கிராமங்களுக்குச்

2024 ஜூன் 21]

செல்லும் சாலைகள் அடர்ந்த வனப் பகுதிக்குள் இருக்கின்றன. அவை கரடுமுரடான குறுகிய வனச் சாலைகளாக உள்ளன. பேருந்துகள் இயக்குகின்ற அளவிற்கு இந்தச் சாலைகள் இல்லை. எனவே, இந்தச் சாலைகளைச் சீரமைக்கும்பட்சத்தில் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.

முற்பகல் 10-55

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியிலே 32 கிராமங்கள் இருக்கின்றன. அதில் பல்வேறு கிராமங்களுக்கு பேருந்துகள் செல்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்தியூரையே பார்க்காத பழங்குடியின மக்கள், ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோர் அந்தப் பகுதியில் பெருமளவில் இருக்கின்றனர். பர்கூர் மலைப் பகுதியைப் பொறுத்தவரையில், மூன்று பகுதிகளாகப் பிரிந்து பரந்த வெளியில் மக்கள் இருக்கின்றார்கள். அந்த மக்களை, பர்கூரில் இருக்கின்ற main road-க்கு, சிற்றுந்துகள் மூலமாகக் கொண்டு வந்து விட்டுவிட்டாலே போதும். மற்ற நான்கு பேருந்துகள் பர்கூரிலிருந்து அந்தியூருக்கு வந்து சென்றுகொண்டிருக்கின்றன. அந்த மக்கள் மிகவும் சௌகரியமாக வந்து சென்றுவிடுவார்கள். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து அந்த மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் காத்திட, சிறப்பு இனமாகக் கருதி, இரண்டு சிற்றுந்துகளை இயக்கித் தந்திட வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதியே இல்லாத மக்களுக்கு பேருந்து வசதியைத் தர வேண்டும் என்பதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய

அறிவுரை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில்தான் தருமபுரி மாவட்டத்தில் வத்தல்மலை என்ற பகுதிக்கு நம்முடைய மாண்புமிகு திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் சென்றபோது, அந்தப் பகுதி மக்கள் பேருந்து வசதி இல்லை என்ற குறையைப் போக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மனு அளித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை கனிவோடு பரிசீலித்து, அந்தச் சாலையை விரிவாக்கம் செய்து, பேருந்து விடுவதற்கு ஆணையிட்டார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்தை அங்கே இயக்கி வைத்தார்கள். எனவே, பேருந்தை இயக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமக்கு வழங்கியிருக்கின்ற அறிவுரை. உறுப்பினருடைய அந்தியூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, அங்கு இருக்கின்ற மலைக் கிராமங்களில், பல்வேறு கிராமங்களுக்கு ஏற்கெனவே பேருந்து வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும், ஒரு சில கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் இல்லை. அதிலே குறிப்பாக மலைப் பகுதியில் அமைந்துள்ள சுண்டப்பூர், சோழகனை போன்ற கிராமங்களுக்குச் செல்லும் சாலையானது குறுகிய கரடுமுரடான மண் சாலையாக உள்ளது. இன்னொன்று, வனத் துறையிலே வனச் சாலைகள் அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் அனுமதி பெற்றுத்தான் அமைக்க வேண்டிய சூழல். எனவே, அதில் இருக்கின்ற இடர்பாடுகளை நீக்கி, அங்கு புதிய சாலைகளை அமைக்கும்பட்சத்தில் அங்கே பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தியூர் தொகுதி மலைவாழ் மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியிலே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இல்லை. அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானி நகருக்குத்தான் செல்ல